தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
Tamil National People's Front
No.43, 3rd Cross Street, Jaffna Established:- 20-02-2010

03-10-2011

# தமிழ்த் தேசியத்தை வலுப்படுத்த கொழும்பு வாழ்தமிழ் மக்கள் மனோகணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணிக்கு வாக்களிக்கவேண்டும்.

தமிழ்மக்கள் மீது சிறீலங்கா அரசு தொடர்ந்துவரும் இன அழிப்பு விவகாரம் இன்று சர்வதேச மயப்படுத்தப்பட்டுள்ள சூழலில் தமிழ்த்தேசிய அரசியலை உலக ரீதியாக வலுப்படுத்த வேண்டிய கடமைப்பாடு தமிழ் மக்கள் அனைவருக்கும் உள்ளது. புலம் பெயர் தமிழ் மக்கள், தமிழ்நாட்டு தமிழ் மக்கள் உட்பட உலகில் வாழும் சகல தமிழ் மக்களும் இப் பணியில் தம்மை ஈடுபடுத்தி வருகின்றனர். எல்லாச்சந்தர்ப்பங்களிலும் தாம் ஒரு தனித்துவமான அரசியல் சமூகம் என்பதையும் நிரூபித்து வருகின்றனர். தேர்தல்களை அதற்கு கருவியாகப் பயன்படுத்துகின்றனர்.

கனடாவில் ஒரு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டுள்ளமை நாம் எல்லோரும் அறிந்ததே. நோர்வே, இலண்டன், பிரான்சு போன்ற நாடுகளிலும் தமிழ்ப் பிரதிநிதிகள் உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களது வெற்றி தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டத்திற்கு வலுச் சேர்த்து வருகின்றது. தமிழ் நாட்டு அரசியல் நிலைமையும் தமிழீழத் தமிழ் மக்களுக்கு ஆதரவாக மாறிவருவதனையும் நாம் அறிவோம். மூவரது தூக்குத் தண்டனையை நிறுத்திவைக்குமளவுக்கு தமிழக மக்கள் தமது இன ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர்.

உலகம் முழுவதும் பரவி வாழும் தமிழ் மக்களது ஒற்றுமையான செயற்பாடுகள் இன்று தமிழ் தேசிய இனத்தை பலப்படுத்தி வருகின்றது. தமிழ் மக்களது ஜனநாயகக் குரலை வலுப்படுத்திவருகின்றது. எங்கெல்லாம் தமிழ் மக்கள் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் இன அடையாளத்தின் கீழ் தமிழ் மக்கள் ஒருங்கிணைந்து வருகின்றனர். இந்த ஒருங்கிணைவைக் காட்டுவதில் இராணுவ நெருக்குவாரங்களுக்குள் வாழும் தாயக மக்களும் பின்னிற்கவில்லை. நடந்து முடிந்த தேர்தல்கள் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு.

கொழும்பு வாழ் தமிழ் மக்களுக்கும் தாம் தமிழ்த் தேசியத்தின் மீது பற்றுக் கொண்ட ஒரு கட்டுறுதியான அரசியல் சமூகம் என்பதை வெளிக்காட்ட வேண்டிய கடமைப்பாடு இருக்கின்றது. இதற்கான சந்தர்ப்பம் மாநகரசபைத் தேர்தல் மூலம் கிடைத்திருக்கின்றது. இதனை சரியாகப் பயன்படுத்த கொழும்புத் தமிழ் மக்கள் தவறக்கூடாது.

தமிழ்த் தேசியத்தினை வலுப்படுத்துவதற்காகவும் இன ஒருமைப்பாட்டை பேணுவதற்காகவும் செயற்படுகின்ற கட்சி மனோகணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணியாகும். இக்கட்சிக்கு கூட்டாக வாக்களிப்பதன் மூலம் மட்டுமே கொழும்புத் தமிழ்மக்கள் தங்களது அரசியல் நிலைப்பாட்டை தெளிவாக வெளிப்படுத்த முடியும்.

மனோகணேசன் அவர்களும் விக்கிரமபாகு கருணாரட்ண அவர்களும் தமிழ்த் தேசம் தனித்துவமான இறைமை கொண்டது என்பதனையும், தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்பதனையும் வெளிப்படையாக ஆதரிக்கும் துணிச்சலான அரசியல் தலைவர்கள். இவர்கள் இருவரும் எந்தவொரு பேரினவாதக் கட்சிகளின் செல்வாக்கிற்கும் உட்படாத நேர்மையான தலைவர்கள். இவர்களுடைய ஆழமான தர்க்கரீதியான, துணிச்சனான கருத்துக்களும், அவை தொடர்பான செயற்பாடுகளும் தமிழ்த் தேசிய அரசியலை வலுப்படுத்துவதற்கு அதிகளவில் உதவியிருக்கின்றன. ஆபத்துக்கள் தம்மை நோக்கி வந்த காலத்திலும் துணிச்சல்களை வெளிக்காட்ட அவர்கள் தயங்கியதில்லை. துணிச்சலான இந்த அரசியல் தலைவர்களையும் அவர்களது கட்சியையும் மேலும் பலப்படுத்த வேண்டியது எம் எல்லோரினதும் கடமையாகும்.

தமிழ்த்தேசிய அரசியல் என வருகின்றபோது இரட்டை வேடங்களுக்கு ஒருபோதும் இடமிருக்கக் கூடாது. புதுடில்லி மாநாட்டிலும், அரசுடனான பேச்சுவார்த்தைகளிலும் இரட்டை வேடம் காட்டியவர்கள்

இன்று கொழும்பு மாநகரசபைத் தேர்தலிலும் இரட்டை வேடம் காட்டுகின்றனர். இது கவலைக்குரியது. தமிழ்த் தேசத்தின் இருப்பை அழிக்கும் செயற்பாடாகும். அத்துடன் அரசியல் ரீதியான அறமும் அல்ல.

கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் இரண்டுலட்சம் வரையான தமிழ் வாக்காளர்கள் உள்ளனர். இவர்கள் ஒருங்கிணைந்து வாக்களிப்பார்களானால் அது வழங்கும் செய்தி தமிழ்த் தேசிய அரசியலுக்கு ஒரு புதிய பரிமாணத்தை கொடுக்கும் என்பதை கொழும்புத் தமிழ் மக்கள் மறக்கக்கூடாது. ஏனெனில் இத் தேர்தலை வெறும் மாநகரசபைத் தேர்தலாக சர்வதேச சமூகம் பார்க்கவில்லை மாறாக தமிழ்த் தேசியத்தோடு கொழும்புத் தமிழ் மக்கள் இருக்கின்றார்களா? என்பதை அளவிடும் ஒரு கருத்துக்கணிப்பாகவே நோக்குவார்கள்.

இத் தேர்தலில் கொழும்பு வாழ் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஓரணியில் நின்று மனோகணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணியின் ஏணிச் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும். அதன் மூலம் தமிழ் மக்களது ஒற்றுமையை சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்துவதன் மூலம் தமிழ்த் தேசத்தின் பேரம்பேசும் சக்தியை வலுப்படுத்த வேண்டும் எனக் கோருகின்றோம்.

செ-கஜேந்திரன்
பொதுச் செயலாளர்
தமிழ் தேசிய மக்கள் முன்னணி

ஜீ.ஜீ.பொன்னம்பலம்
உபதலைவரும், வெளிவிவகாரக் குழு தலைவரும்
தமிழ் தேசிய மக்கள் முன்னணி